# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 131 /2018

Deposition of witness for: PW - 1

| | | | |
|---|---|---|---|
| Name | : Pandeeswari | Father/Husband Name: Muniyandi | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 19.01.2021 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2021.

முதல் விசாரணை:

நான் திருமோகூரில் வசிக்கிறேன். டெய்லராக வேலை செய்கிறேன். 1-வது எதிரி மாரிச்சாமி எனது தாய்மாமன் முறையாவார். அவர் எனது முதல் கணவர். 2,3, 5 வரையிலான எதிரிகள் என் அம்மாவின் உடன்பிறந்த சகோதரிகள். 1வது எதிரி என் அம்மாவின் உடன்பிறந்த தம்பி. கடந்த 13.09.07ம் தேதி எனக்கும் 1-வது எதிரிக்கும் மாந்தோப்பு அங்காளபரமேஸ்வரி கோயிலில் வைத்து திருமணம் நடந்தது. திருமணத்தின்போது என் பெற்றோர் 20 பவுன் நகையும், 3 லட்சம் ரூபாய் மதிப்புள்ள சீர்வரிசை பொருட்களை சீதனமாக கொடுத்தனர். திருமணத்திற்கு பிறகு 1வது எதிரி அடிக்கடி குடித்துவிட்டு வந்து துன்புறுத்துவார். 2 பெண்களுடன் நாகலெட்சுமி மற்றும் தமயந்தி ஆகியோருடன் தவறான உறவு வைத்துக்கொண்டு எனது நகைகளை எல்லாம் அடகு வைத்துவிட்டு என்னை கொடுமைப்படுத்துவார். மேலும் நகையையும், ரூ.5 லட்சம் பணமும் வாங்கி வந்தால்தான் என்னோடு வாழமுடியும் என்று அடித்து துன்புறுத்தினார். மற்ற எதிரிகளான 1வது எதிரியின் சகோதரிகளிடம் சொன்னபோது அவர்கள் என் தம்பி கேட்டபடி நகைகளை வாங்கி வந்தால்தான் என் தம்பியுடன் சேர்ந்து வாழமுடியும் என்றார்கள். பிறகு என்னை அடித்து கொலை முயற்சி செய்தார்கள், அதனால் நான் தாங்கமுடியாமல் என் பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிட்டேன். பின்னர் 06.11.15ம் தேதி எதிரிகள் அணைவரும் என் பெற்றோர் வீட்டில் நான் இருந்தபோது எங்கள் ஊரான திருமோகூருக்கு வந்து என்னை அடித்து துன்புறுத்தி அசிங்க அசிங்மாக பேசி சீக்கிரமாக நகைகளை வாங்கிவருமாறு

கூறினார்கள். அதன்பிறகு அவர்களின் தொலை தாங்கமுடியாமல் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான், அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் அ.சா.ஆ.1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

சந்தர்ப்பம் அளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 131 /2018

Deposition of witness for: PW - 2

| | | | |
|---|---|---|---|
| Name | : Muniyandi | Father/Husband Name: Pandi | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 19.01.2021 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2021.

முதல் விசாரணை:

நான் திருமோகூரில் வசிக்கிறேன். சில்வர் பட்டறை நடத்தி வருகிறேன். அ.சா.1 என் மகள். 1-வது எதிரி மாரிச்சாமி எனது மருமகன், மற்ற எதிரிகள் என் கொளுந்தியாக்கள். கடந்த 13.09.07ம் தேதி என் மகளுக்கும் 1-வது எதிரிக்கும் மாந்தோப்பு அங்காளபரமேஸ்வரி கோயிலில் வைத்து திருமணம் நடந்தது. திருமணத்தின்போது நாங்கள் 20 பவுன் நகையும், 3 லட்சம் ரூபாய் மதிப்புள்ள சீர்வரிசை பொருட்களை சீதனமாக கொடுத்தோம். திருமணத்திற்கு பிறகு 1வது எதிரி மற்ற பெண்களுடன் தொடர்பு வைத்துக்கொண்டு, குடித்துவிட்டு வந்து என் மகளை துன்புறுத்துவார். பண்டபாத்திரங்கள், நகைகளை அடகு வைத்துவிட்டு மற்ற பெண்களிடம் கொடுத்துவிட்டு வீட்டிற்கு வந்து என் மகளை கொடுமைப்படுத்தி, சித்திரவதை செய்து வந்தார். மேலும் 5 லட்சம் ரூபாய் பணமும், நகையும் எங்களிடமிருந்து வாங்கி வரச்சொல்லி சித்திரவதை செய்து வந்தார். பின்னர் 2015ம் வருடம் ஒருநாள் எதிரிகள் அனைவரும் எங்கள் வீட்டிற்கு வந்து அசிங்கமாக பேசி அடிக்க வந்தும் நகை மற்றும் பணங்களுடன் வந்தா வா இல்லாவிட்டால் இங்கேயே இரு என்றும், மேலும் தகாத வார்த்தைகளை பேசி சென்றுவிட்டார்கள். பின்னர் என் மகளும் என் மனைவியும் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார்கள். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

சந்தர்ப்பம் அளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 131 /2018

Deposition of witness for: PW - 3

| | | | |
|---|---|---|---|
| Name | : Murugeswari | Father/Husband Name: Muniyandi | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 19.01.2021 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2021.

முதல் விசாரணை:

நான் திருமோகூரில் வசிக்கிறேன். சில்வர் பட்டறை நடத்தி வருகிறேன். அ.சா.1 என் மகள். 1-வது எதிரி மாரிச்சாமி எனது தம்பி, மற்ற எதிரிகள் என் தங்கைகள். 2007ம் வருடம் ஒருநாள் என் மகளுக்கும் 1-வது எதிரிக்கும் மாந்தோப்பு அங்காளபரமேஸ்வரி கோயிலில் வைத்து திருமணம் நடந்தது. திருமணத்தின்போது நாங்கள் 20 பவுன் நகையும், 3 லட்சம் ரூபாய் மதிப்புள்ள சீர்வரிசை பொருட்களை சீதனமாக கொடுத்தோம். திருமணத்திற்கு பிறகு 1வது எதிரி மற்ற பெண்களுடன் தொடர்பு வைத்துக்கொண்டு, குடித்துவிட்டு வந்து என் மகளை துன்புறுத்துவார். பண்டபாத்திரங்கள், நகைகளை அடகு வைத்துவிட்டு மற்ற பெண்களிடம் கொடுத்துவிட்டு வீட்டிற்கு வந்து என் மகளை கொடுமைப்படுத்தி, சித்திரவதை செய்து வந்தார். என் மகளை கொடுமைப்படுத்தியதில் என் மகள் தூக்குமாட்டி தற்கொலைக்கு முயன்றதாக என் மகள் போன்மூலம் எனக்கு தகவல் சொல்லி இரவோடு இரவாக அழைத்ததன்பேரில் நாங்கள் இரவு 1 மணிக்கு என் மகளை அழைத்து வந்தோம். பின்னர் 2015ம் வருடம் ஒருநாள் எதிரிகள் அணைவரும் எங்கள் வீட்டிற்கு வந்து அசிங்கமாக பேசி மல்லுக்கட்டி மேலும் வரதட்சனையாக ரூ. 5 லட்சம் வாங்கி வருமாறு கூறினார்கள். பின்னர் நாங்கள் ஒத்தக்கடை காவல் நிலையம் சென்று புகார் கொடுக்க சென்றதும் எதிரிகள் ஓடிவிட்டார்கள். பிறகு நாங்கள் மேலூர் அனைத்து மகளிர் காவல் நிலையம் வந்து புகார் கொடுத்தோம். போலீசார் என்னை விசாரித்தனர். நான் ஒத்தக்கடை காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்க சென்றபோது இடை வழியிலிருந்த போலீசார் இரத்தக்காயத்தோடு இருந்த எங்களை பார்த்ததும் 1-வது எதிரியை அவர்களே அடித்தனர்.

குறுக்கு விசாரணை:

சந்தர்ப்பம் அளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.